இணைய வழியில் விண்ணப்பித்த அன்றே – தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் வாயிலாக

விவசாயிகளுக்கு பயிர்க்கடன் வழங்கும் திட்டம்!

தருமபுரி – அதியமான்கோட்டையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

தருமபுரி, ஆக. 19- தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (17.8.2025) தருமபுரி மாவட்டம், அதியமான்கோட்டையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் விண்ணப்பித்த அன்றே பயிர்க்கடன் வழங்கும் புதிய திட்டத்தை துவக்கிவைத்தார். இந்த திட்டமானது நாட்டிற்கே முன்னோடியான திட்டம் ஆகும்.

2025-26-ஆம் ஆண்டிற்கான கூட்டுற வுத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் “தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் விண்ணப்பித்த அன்றே பயிர்க்கடன் வழங்கப்படும்” என்ற அறிவிப்பை வெளியிட்டார்.

விவசாயப் பெருங்குடி மக்கள் பயிர்க் கடன் பெறுவதற்கு தொடர்புடைய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு நேரடியாகச் சென்று விண்ணப் பித்து, ஒரு வார காலத்திற்குள் அக்கடனைப் பெறும் நடைமுறையே தற்பொழுது நடைமுறையில் இருந்து வருகிறது.

இந்நடைமுறையில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு, இணையவழியில் (Online) பயிர்க்கடன் விண்ணப் பிக்கும் நடைமுறையும், விண்ணப்பித்த அன்றே விவசாயிகளின் வங்கிக் கணக்கில் பயிர்க்கடனை நேரடியாக வழங்கும் நடைமுறையும் தருமபுரி மாவட்டத்தில் முன்னோடி திட்டமாக (Pilot) செயல்படுத்தப்பட்டு, பின்னர் தமிழ்நாடு முழுவதும் விரிவு படுத்தப் படும். மேற்கண்ட அறிவிப்பினை நிறைவேற்றும் விதமாக முதற்கட்டமாக தருமபுரி மாவட்டத்தில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை சேர்ந்த உறுப்பினர்கள் இணைய வழியில் விண்ணப்பித்த அன்றே பயிர்க்கடன் வழங்கும் திட்டம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் இன்று தொடங்கி வைக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் தங்களுக்கு அருகில் உள்ள பொது சேவை மையத்திலோ, இணையவழியிலோ தங்களது தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்க உறுப்பினர் எண் அல்லது மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி சேமிப்பு கணக்கு எண்ணைக் கொண்டு பயிர்க்கடன் விண்ணப்பிக்கும் மிக எளிமையான முறை உருவாக்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் நில உடைமை தொடர்பான விவரங்கள் வருவாய்த் துறையிடம் இருந்தும் பயிர்சாகுபடி தொடர்பான விவரங்கள் வேளாண் துறையிடம் இருந்தும் இணைய வழியில் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்து, சம்மந்தப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்கு இணைய வழியில் அனுப்பப்படும்.

சம்மந்தப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் செயலாளர், மத்திய கூட்டுறவு வங்கியின் களமேலாளர் மற்றும் கிளை மேலாளர் தங்கள் கணினி வழியே விவசாயிகள் குறித்த விவரங்களை சரிபார்த்து கடன் தொகையை அன்றைய தினமே விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைப்பர்.

இத்திட்டத்தை துவக்கி வைப்பதன் அடையாளமாக இன்று தருமபுரி மாவட்டம் அதியமான்கோட்டை தொடக்க வேளாண் மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் மற்றும் பாலஜங்கமனஅள்ளி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தைச் சார்ந்த 5 விவசாயிகளுக்கு முதல்வர் அவர்களால் வட்டியில்லாத விவசாயக் கடன் வழங்கப்பட்டது.

இத்திட்டம் நடப்பாண்டிலேயே விரைவில் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப் படும். இணையவழியில் கடன் பெறும் இத்திட்டம் படிப்படியாக சுய உதவிக் குழுக்களு க்கான கடன், சிறு, குறு வணிகக்கடன் என பிற வகைக் கடன்களையும் இணைய வழியிலேயே விண்ணப்பித்துப் பெறுமளவிற்கு நடப்பாண்டிலேயே விரிவுபடுத்தப்படும்.

மகளிர் சுய உதவிக் குழுத் திட்டம் 1989-ஆம் ஆண்டு தருமபுரியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கிவைக்கப்பட்டது. மேலும், தருமபுரி மாவட்டம், தொப்பூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டப் பயனாளிகளின் விண்ணப்பங்களைப் பதிவு செய்யும் முகாமினை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 24.7.2023 அன்று தொடங்கி வைத்தார். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கம் 1908 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு 117 வருடங்களாக செயல்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அதைத்தொடர்ந்து, இன்றையதினம், தொடக்க வேளாண்மைக் கூட்டுற வுக் கடன் சங்கங்களில் விண்ணப்பித்த அன்றே பயிர்க்கடன் வழங்கும் புதிய திட்டத்தையும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இங்கு தொடங்கி வைக்கப்பட்டது சிறப்புக்குரியது.

இந்த நிகழ்ச்சியில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை மற்றும் உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், சுற்றுலாத் துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பி. வெங்கடேசன், கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை முதன்மைச் செயலாளர் சத்யபிரதாசாகு, கூட்டுறவு சங்கங்களின் மாநில பதிவாளர்கள் நந்தகுமார், தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் ரெ.சதீஷ் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வருமான வரித்துறை – சி.பி.ஐ. – அமலாக்கத் துறைகளை ஆயுதமாக்கும் பி.ஜே.பி. அரசு!

எந்த அச்சுறுத்தல்களுக்கும் அஞ்சாது தி.மு.க. ஆட்சி!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஆக.19- வருமான வரித்துறை, சி.பி.ஐ., அமலாக்கத் துறை ஆகிய ஆயுதங்களைப் பயன்படுத்தி, சில கட்சிகளை அடிமைப்படுத்தலாம்; ஆளுநரைக் கொண்டு அவதூறுகளைப் பரப்பலாம்; தந்தை பெரியார் கொள்கையை அஸ்திவாரமாகக் கொண்ட கொள்கைக் கோட்டையான தி.மு.க. ஆட்சியை அசைக்க முடியாது; 2026 ஆம் ஆண்டு தேர்தலில் அதைக் காணலாம் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவரது அறிக்கை வருமாறு :-

சரித்திரம் படைத்து, உலகத்தின் கவனத்தை ஈர்க்கும் தமிழ்நாட்டு ‘திராவிட மாடல்’ தி.மு.க. ஆட்சிக்கும், ‘திராவிட மாடல்’ ஆட்சியின் நாயகர் ஒப்பற்ற முதலமைச்சரின் சாதனைகளுக்கும், அசைக்க முடியாத, எடுத்துக்காட்டான கொள்கைக் குடும்பக் கூட்டணிக்கும், மக்கள் செல்வாக்கும், பேராதரவும் பெருகிய வண்ணம் உள்ளது!

இதைக் கண்டு பொறாத பா.ஜ.க. - ஆர்.எஸ்.எஸ்., ஒன்றிய ஆட்சி தங்களிடம் உள்ள திரிசூலமான

1. வருமான வரித்துறை
2. சி.பி.ஐ.
3. அமலாக்கத் துறை

ஆகியவற்றை அரசியல் ஆயுதங்களாக்கி, அதன்மூலம் விபீடண, அனுமான், சுக்ரீவ, பிரகலாதக் கூட்டங்களைத் தங்கள் அரசியல் அடிமைகளாக்கி வைத்துள்ளது.

அதே அணுகுமுறையை பா.ஜ.க.வின் எதிர்க்கட்சியினரின் வீட்டிலும், அலுவலகங்களிலும் சட்ட விதிகளுக்கு முற்றிலும் புறம்பாகக்கூட “ரெய்டு” மூலம் ‘அவப்பெயர்’ உண்டாக்கி, அவர்களுக்கு எதிராக ஓர் அவதூறு பரவும்படி செய்து, உளவியல் ரீதியாகவும் அச்சுறுத்திட இந்த அமைப்புகளை, “பழிவாங்கும் ஆயுதங்களாக்கி”, ஏவிவிடுகிறது. எப்போதோ நடந்ததாகப் போடப்பட்ட வழக்கில், நடுவில் ‘இடைச்செருகல்’ போல பலவற்றை நுழைத்து, அமலாக்கத் துறையின் விசாரணைக்குக் கொண்டு வந்து, அடிப்படைகளைப் பறிப்பது என்பதைப் பல வழக்குகளில் உச்சநீதிமன்றமும், உயர்நீதிமன்றங்களும் சுட்டிக்காட்டியும், கண்டித்தும்கூட, இன்னமும் அவற்றின் செயல்பாடு, குறிப்பாக, அமுலாக்கத் துறையின் செயல்பாடு மாறியதாகவே தெரியவில்லை. காரணம், ‘மேலே’ இவர்களை ஏவியவர்களின் அம்பாக வந்து, முனை முறிந்து, நீதிமன்றங்களிடம் ‘குட்டு’ வாங்கியும்கூட, அதன் போக்கு மாறவில்லை என்பது வியப்புக்குரியதே!

நீதிமன்றங்களில் குட்டு வாங்கும் அமலாக்கத் துறை!

மேல் அமலாக்கத் துறை போட்ட சுமார் 102-க்கும் மேற்பட்ட வழக்குகளில் 2 வழக்குகளில்தான், அதனால் தண்டனை வாங்கிக் கொடுக்க முடிந்தது; அதேநேரத்தில், நீதிமன்றங்களில் வாய்தாவுக்கு மேல் வாய்தா வாங்கியும், கடைசியில் நீதிமன்றக் கண்டனத்தையே தான் பெற முடிந்தது.

தமிழ்நாடு தி.மு.க. அரசில், மூத்த அமைச்சர்களில் ஒருவரான திரு.அய்.பெரியசாமி (திண்டுக்கல்) அவரது மகனும், பழனி சட்டமன்ற உறுப்பினருமான செந்தில் ஆகியோரைக் குறி வைத்து நேற்று (17.8.2025) ‘ரெய்டு’ நடத்தப்பட்டு, ஊடகங்களில் வெளிச்சம் பாய்ச்சப்பட்டது. விசாரணை, திடீர் சோதனை என்றால்கூட, அவற்றைச் சட்ட வரம்புக்குள் நின்று செய்யவேண்டாமா?

சட்டமன்ற உறுப்பினர் அறையின் பூட்டை உடைக்க அமலாக்கத் துறைக்கு உரிமை உண்டா?

சென்னையில் உள்ள சட்டமன்ற உறுப்பினர் விடுதிக்குள்ளே நுழைந்து, குறிப்பிட்ட சட்டமன்ற உறுப்பினர் அறையின் பூட்டை உடைத்துப் பரிசோதனை செய்தது தவறு; அப்படி செய்வதற்குச் சட்டப்பேரவைத் தலைவரின் அனுமதியைப் பெற்றிருக்கவேண்டாமா?

இந்தச் சிறு செயல், நாளை ‘சட்டமன்றம் Vs ஆட்சிமன்றம்’ (Legislative Vs Executive) என்ற பெரும் அதிகார எல்லைப் பிரச்சினையாக மாறி, பெரு நெருப்பாக மாறிவிடாதா? யோசிக்க வேண்டாமா? (வழக்கும் பதிவாகியிருக்கிறது).

இது ஒருபுறம். தமிழ்நாட்டின் ஆளுநர் எதிர்க்கட்சித் தலைவரா?

தமிழ்நாட்டில் உள்ள பச்சை ஆர்.எஸ்.எஸ். பரப்புரை செய்யும் ஆளுநர் என்ற தன்மானத்தையும், சொரணையையும் இழந்துவிட்ட ஒரு நபர் (இப்படி எழுதுவதற்கு மிகவும் வருத்தமாக இருந்தாலும்) உச்சநீதிமன்றத்தின் பல தீர்ப்புகளில் கண்டனங்களைப் பெற்றும், அதைப் பொருட்படுத்தாமல், நாளும் ‘திராவிட மாடல்’ ஆட்சிக்கு எதிராக அவதூறுகளை வீசி வருகிறார்; தனக்கு ‘எல்லாம் தெரிந்ததைப் போல’ ஒரு போட்டி அரசு நடத்திட முயன்று, தமிழ்நாட்டு மக்களின் அருவருப்பை நாளும் சம்பாதிக்கிறார்; தான் பதவிப் பிரமாணம் எடுத்த அரசியல் அமைப்புச் சட்ட வரிகளைக்கூட மறந்து, ‘தானடித்த மூப்பாகவே’ நடந்து வருகிறார்; எதிர்க்கட்சியாகக்கூட அல்ல, “எதிரிக்கட்சித்” தலைவர்போல அன்றாடம் ஏதாவது ‘விஷமதான’, ‘அங்குரார்ப்பணத்தைச் செய்கிறார், அரசு சம்பளம் வாங்கிக்கொண்டு!

திருக்குறளில் இல்லாத குறளையே புதிதாகப் போடுவது, தனது “பஜனைக் கூட்டம் ஒன்றை” அழைப்பது, ஊடக வெளிச்சத்தில் குளிர் காய வைப்பது போன்ற பணிகளைச் செய்து, சட்டமன்ற மரபுகள், ஆட்சியின் மாண்பிற்குரிய விழுமியங்களை மிகவும் கீழிறக்கத்திற்குக் கொண்டு செல்வதன்மூலம் தி.மு.க. ஆட்சிக்குத் தொல்லை தர ஒவ்வொரு நாளும் திட்டமிட்டுச் செயலாற்றுகிறார்!

இது தந்தை பெரியாரின் மண்!

இவற்றால், பெரியார் மண்ணின் பெருமைக்குரிய கொள்கை அஸ்திவாரத்தில் அமைந்த கற்கோட்டையான தி.மு.க. ஆட்சியின் மக்கள் ஆதரவை அசைக்க முடியாது!

அவதூறுச் சேறுகளும், ஆதாரமில்லா அச்சுறுத்தல்களும் நாளும் ‘தி.மு.க.வின்’ வெற்றி விளைச்சலுக்கான உரங்கள், உரங்கள், உரங்கள் என்பதை அந்த ‘அரசியல் பிழைத்தோருக்கு’ 2026 இல் நடைபெறப் போகும் சட்டமன்றப் பொதுத் தேர்தலில் மக்கள் உணர்த்துவர் என்பது நிச்சயம்!

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் பணியாற்றி சாலை விபத்தில் சிக்கி உயிரிழந்த அஸ்தினாபுரத்தை சேர்ந்த அரசு மருத்துவர் மணிகுமார் அவர்களின் உடலுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேரில் சென்று மலர் மாலை அணிவித்து மரியாதை செய்தார். அருகில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, பகுதிச் செயலாளர்கள் இ.ஜோசப் அண்ணாதுரை, ஏ.கே.கருணாகரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் விரைவில் திறந்து வைக்கிறார்!

சைதை அரசு மருத்துவமனையில் ரூ.28.70 கோடி மதிப்பிலான புதிய கட்டிடம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, ஆக. 19 - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (18.08.2025) சைதாப்பேட்டை அரசு மருத்துவமனையில் ரூ. 28.70 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு பயன்பாட்டிற்கு வரவுள்ள மருத்துவ கட்டிடம் மற்றும் மருத்துவ உபகரணங்களை பார்வையிட்டு ஆய்வு மேற்கோண்டார். பிறகு அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

சைதாப்பேட்டையில் உள்ள அரசு மருத்துவமனை 120 ஆண்டுகளை கடந்த ஒரு பழமையான மருத்துவமனை. இந்த மருத்துவமனையில் பல ஆண்டு காலமாக சைதாப்பேட்டையில் இருப்பவர்கள் மட்டுமல்லாது. மடிப்பாக்கம், உள்ளகரம், புழுதிவாக்கம், பள்ளிக்கரணை, ஜல்லடியான்பேட்டை, சோழிங்கநல்லூர், அக்கரை போன்று பல்வேறு இடங்களிலிருந்தும் கூட இம்மருத்துவமனைக்கு சிகிச்சை பெற்று செல்கின்றனர். இந்த மருத்துவமனை மிகப் பழமை வாய்ந்த கட்டிடங்களோடு இருந்தது. 2016 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இ.சி.ஜி கருவி ரூ.56 இலட்சம் செலவில் வழங்கப்பட்டது. பிறகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி. இந்த மருத்துவமனையை மேம்படுத்திட அரசின் சார்பில் நிதியாதாரம் பெறப்பட்டு ரூ.28.70 கோடி மதிப்பீட்டில் இன்றைக்கு புதிய கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. 68.920 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டிருக்கும் இந்தக் கட்டிடத்தைப் பொறுத்தவரை சைதை தொகுதி மருத்துவமனையின் மிகப் பெரிய அளவிலான மேம்பாட்டிற்கு வழிவகுத்திருக்கிறது.

மருத்துவமனை வசதிகள்!

தரைத்தளம் மற்றும் 6 தளங்கள் கொண்ட இந்த கட்டிடத்தில் தரைத்தளத்தை பொறுத்தவரை பார்க்கிங் வசதியும். முதல் தளத்தைப் பொறுத்தவரை புறநோயாளிகள் பிரிவும், ஊசி போடும் அறை, மருந்தகம், ஆய்வகம், ஸ்கேன் அறை என்று முதல் தளத்தில் பயன்பாட்டிற்கு வரவுள்ளது. இரண்டாவது தளத்தில் பிரசவ அறை, அறுவை சிகிச்சை அரங்கு, பிரசவத்திற்கு முந்தைய வார்டு, பிந்தைய வார்டு, செவிலியர்கள் அறை என்று இரண்டாவது தளத்தில் பயன்பாட்டிற்கு வர உள்ளது. மூன்றாவது தளத்தில் ரூ.1 கோடி செலவில் ஒருங்கிணைந்த ஆய்வகம் அமைக்கப்பட்டு வருகிறது. அதோடு ஸ்கேன் அறை, காது மூக்கு தொண்டை சிகிச்சை அறை, குழந்தைகள் பிரிவு, அவசர சிகிச்சை பிரிவு என்று பல்வேறு வசதிகளுடன் பயன்பாட்டிற்கு வர உள்ளது. நான்காவது தளத்தில் 15 படுக்கை வசதிகளுடன் குழந்தைகள் சிகிச்சை பிரிவு, 14 படுக்கை பொது சிகிச்சை பிரிவு, 12 படுக்கை வசதிகளுடன் பிரசவத்திற்கு பிந்தைய பிரிவு என்று 4வது தளம் மிகச் சிறந்த அளவில் பயன்பட இருக்கிறது. 5வது தளத்தில் 43 படுக்கை வசதிகளுடன் பொது சிகிச்சை பிரிவு, உணவு வைப்பு அறை என்று தயாராக இருக்கிறது. 6வது தளத்தில் 3 அறுவை சிகிச்சை அரங்குகள், அறுவை சிகிச்சைக்கு முந்தைய சிகிச்சை பிரிவு என்று பல்வேறு வசதிகள் வர இருக்கிறது. ஆக இந்த புதிய மருத்துவமனை வளாகத்தில் ஒட்டுமொத்தமாக 4 அறுவை சிகிச்சை அரங்குகள், ஒருங்கிணைந்த ஆய்வகம் என்று பல்வேறு வசதிகள் இருக்கின்றது. இதோடுமட்டுமல்லாமல் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்னாள் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு. ரோட்டரி சங்கத்தின் சார்பில் 14 டயாலிசிஸ் இயந்திரங்கள் தற்போது பயன்பாட்டில் இருந்து வருகிறது. இம்மருத்துவமனைக்கு சென்னையின் பல்வேறு பகுதிகளிலிருந்து டயாலிசிஸ் சிகிச்சை பெற்று வருகிறார்கள். ஒரு நாளைக்கு 3 டயாலிசிஸ் சிகிச்சைகள் முழுமையாக பயன்பாட்டில் இருந்து வருகிறது. ஒருவருக்கு டயாலிசிஸ் செய்யும் நேரம் 4 மணி நேரம் என்கின்ற வகையில் ஒரு நாளைக்கு 3 பிரிவுகளாக பயன்பாட்டில் இருந்து வருகிறது.

டயாலிசிஸ் இயந்திரங்கள், இரத்த வங்கி !

எனவே அதனை அதிகரிக்க வேண்டும் என்கின்ற வகையில் முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று, ரோட்டரி சங்க நிர்வாகிகளிடம் மீண்டும் 11 டயாலிசிஸ் இயந்திரங்கள் கேட்டிருக்கிறோம். ஆக இக்கட்டிடம் பயன்பாட்டிற்கு வரும்போதே 25 டயாலிசிஸ் இயந்திரங்கள் பயன்பாட்டிற்கு வர இருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல் இந்த மருத்துவமனையில் ரூ.1 கோடி செலவில் அதிநவீன வசதிகளுடன் கூடிய இரத்த வங்கி ஒன்றை ரோட்டரி சங்கம் ஏற்படுத்தி தர முன்வந்திருக்கிறார்கள். எனவே இக்கட்டிடம் திறந்து வைக்கும்போது 25 டயாலிசிஸ் இயந்திரங்கள், ரூ.1 கோடி செலவில் இரத்த வங்கி போன்று பல்வேறு அதிநவீன வசதிகளுடன் இம்மருத்துவமனை பயன்பாட்டிற்கு வர இருக்கிறது. கட்டுமானப் பணிகள் முழுமையாக நிறைவுற்றிருக்கிறது. மின் சார இணைப்பு பணி இன்றோடு முடிவடைய உள்ளது. தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகம் (TNMSC) சார்பில் மருத்துவ உபகரணங்கள் விநியோகம் செய்து விட்டார்கள். மருத்துவ உபகரணங்கள் பொறுத்தும் பணிகள் இன்னும் ஒரு வார காலத்திற்குள் முடிவடைந்து விடும். எனவே அடுத்த மாதம் முதல் வாரத்தில் தமிழ்நாடுதுணை முதலமைச்சர் அவர்களால் இந்த மருத்துவமனையின் புதிய கட்டிடம் பயன்பாட்டிற்கு வரவிருக்கிறது.

கல்லீரல் முறைகேடு

ஏற்கெனவே காவல்துறையில் புகார் தந்திருக்கிறோம். இரண்டு புரோக்கர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். காவல்துறை ஆய்வறிக்கையில் சொல்லப்பட்டிருப்பது போல இதற்கு யார் காரணம் என்பதை ஆராய்ந்து காவல் துறை சார்பில் நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தப்பட்டிருக்கிறது என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் ஊரகநலப்பணிகள் இயக்குநர் மரு.சித்ரா, பெருநகர மண்டலக்குழுத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, தேசிய நலவாழ்வு குழும மாவட்ட வருவாய் அலுவலர் பழனிகுமார், பொறியாளர் கார்த்திகேயன், இணை இயக்குநர் மரு.மலர்விழி மற்றும் மருத்துவர்கள், பொதுப்பணித்துறை அலுவலவர்கள் உடனிருந்தனர்.

பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி குரோம்பேட்டை ராதா நகர் ரயில்வே சுரங்கப்பாதை இறுதி கட்டப் பணிகளை மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் இ.கருணாநிதி எம்.எல்.ஏ நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டு ரயில்வே மற்றும் நெடுஞ்சாலைத்துறை உயர் அதிகாரிகளிடம் விரைந்து பணிகளை முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வழிவகை செய்யுமாறு கேட்டுக் கொண்டார் அப்பொழுது மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை மாநகராட்சி உதவி செயற்பொறியாளர் ஆகியோர் உடன் இருந்தனர்.